**13.11.2024**

**O.S.No.278/2023**

**வா.சா.1 : மாணிக்கம்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் 2 அயிட்ட சொத்துக்களுக்கு பாகம் கோரியுள்ளேன். 2 வது அயிட்ட சொத்து நானும், பிரதிவாதிகளும் கூட்டாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் கூட்டாக தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தை சரி பாகமாக பிரித்து அதில் 1/3 பாகமாக எனக்கு கொடுப்பதில் பிரதிவாதிகளுக்கும், எனக்கு ஆட்சேபணை இல்லை.

2) 1 வது அயிட்ட சொத்து 5 சர்வே எண்களை கொண்டது. ஒவ்வொரு சர்வே எண்ணும் தனி தனியாக எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று என்னுடைய வழக்கிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அது பூர்வீக சொத்து. சொத்து தலைமுறை தலைமுறையாக வருகிறது. சொத்து தலைமுறை தலைமுறையாக வருகிறது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர் உரை படித்து பார்த்தேன். ஞாபகம் இல்லை.

3) என் தாத்தா பெயர் லட்சுமணக் கவுண்டர். அவருக்கு அடுத்தவர் அண்ணாமலை, அடுத்தவர் பெயர் ராமசாமி. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இந்த சொத்து என் தாத்தாவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று வில்லங்கம் போட்டு பார்த்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா, என் அப்பா எல்லாம் சேர்ந்து

30.05.1974 பாகப் பத்திரம் எழுதியுள்ளார்கள் என்றால் பாகம் செய்து கொண்டார்கள்.

4) அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் என் அப்பா, சின்ன தாத்தா, அண்ணாமலை கவுண்டரின் மகன் பெருமாள் மற்றும் நாராயன கவுண்டர் ஆகியோர்களை காட்டி எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனக்கு மேற்படி பாக பிரிவினை பத்திரம் எழுதப்பட்ட விவரம் தெரியும் என்றும் தெரிந்து கொண்டே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பாக பிரிவினை பத்திரத்தில் என் அப்பாவுக்கும், என் தாத்தாவுக்கும் சேர்ந்து சர்வே எண். 583/4, 99 செண்ட், 575/3, 3.83 செண்ட் ஒதுக்கப்பட்டது.

5) இந்த சர்வே எண்ணை தவிர வேறு சொத்துக்கள் இந்த பாக பிரிவினை பத்திரத்தில் என் அப்பாவுக்கும், என் தாத்தாவுக்கும் ஒதுக்கப்படவில்லை. இந்த இரண்டு சர்வே எண்ணிலும் 1/3 பாகமாக பிரித்து எனக்கும், பிரதிவாதிக்கும் ஒதுக்க பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அதை 3 பாகமாகத்தான் பிரிக்கவேண்டும். சர்வே எண். 584/2எ, 70 செண்ட் என் அப்பாவிற்கு எவ்வழியில் பாத்தியப்பட்டது என்று நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது பரம்பரை சொத்து.

6) ஏற்கனவே செய்த பாக பிரிவினையில் 2.4 செண்ட் ஆனது அண்ணாமலை கவுண்டர் மற்றும் அவரது மகன்களுக்கும், 1.2 செண்ட் ராமசாமி மற்றும் அவரது

மகன்களுக்கும் பிரிக்கப்பட்டது என்றால் கொடுக்கப்படவில்லை. 30.05.1974 ல் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரத்தில் அண்ணாமலை கவுண்டர் மற்றும் அவரது மகன்களுக்கும், 1.2 செண்ட் ராமசாமி மற்றும் அவரது மகன்களுக்கும் பிரித்து தரப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

7) சர்வே எண். 584/2 எ-ல் 70 செண்ட்டை பொறுத்து எனக்கு பாகம் கோருவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தின் கணினி பட்டா தற்போதும் என் அப்பாவின் பெயரில் இருந்து வருவதால் அதன் அடிப்படையில் நான் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. சர்வே எண். 575/4 ல் என் பெயரில் அரசு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) அந்த சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன். அது எனது சுயமான சொத்து என்பதால் அதை நான் இந்த பாக பிரிவினை வழக்கில் சேர்க்கவில்லை. அரசாங்கத்தால் வருவாய் துறை பட்டா வழங்கப்பட்டதால் தான் அதை சுயமான சொத்து என்று சொல்கிறேன். ச.எண்.576/7 ல் 1.33 செண்ட் என் அப்பாவிற்கு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது என்றால் அது எனது அப்பாவின் பூர்வீக சொத்து. அந்த சொத்தை 27.09.2021 ல் தம்மம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2 ம் பிரதிவாதிக்கு என் அப்பா தான பத்திரம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அதில் எனக்கு உரிமை உள்ளது. அதை மணி தன் பெயரில் பட்டா மாற்றி அனுபவதித்து வருகிறார் என்றால் அதில் எனக்கும் உரிமை உள்ளது.

9) ச.எண். 576/7 ல் சொத்து என் அப்பாவிற்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்து என்பதால் அதை 2 ம் பிரதிவாதிக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி வைக்க என் அப்பாவிற்கு உரிமை உள்ளது என்றும், அதில் பாகம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால்  சொன்னால் சரியல்ல. அது என் அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் 30.05.1974 ம் தேதி பாக பிரிவினை பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

10) மேற்படி சொத்து என் அப்பாவிற்கு எவ்வகையில் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பது குறித்து எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ச.எண்.579/3 ல் உள்ள சொத்து என் தாயார் கருப்பாயிக்கு 12.06.1989  பதிவு கிரையம் மூலம் பெறப்பட்ட சொத்து.  அந்த சொத்து எங்கள் மூவருக்கும் பொதுவான சொத்து. அது பொதுவில் சம்பாத்தித்து என் அம்மா பெயருக்கு எழுதி வாங்கப்பட்டது.

11) அவ்வாறு எந்த அளவிற்கு வருமானம் வந்தது, எந்த வகையில் வருமானம் வந்தது, எப்போது வந்தது போன்ற விவரங்களையும், எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது போன்ற விவரங்களை என்னுடைய வழக்குரையிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அது பூர்வீக சொத்து அல்ல என்றால் சரிதான். அது மூன்று பேரும் சேர்ந்து சம்பாதித்த சொத்து. கருப்பாயிக்கு சுயமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 27.09.2021 ம் என் தாயார் கருப்பாயி 1 ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில் மெண்ட்

பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அதில் எங்கள் 3 பேருக்கும் பாத்தியப்பட்டது. அதன் அடிப்படையில் தருமர் சொத்தை சுவாதீனத்தில் எடுத்து அவர் அனுபவித்து வருரகிறார் என்று சொன்னால் சரியல்ல.

12) அந்த சொத்தினை தன் பெயரில் வருவாய் துறை அலுவலகத்தில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்றால் அவ்வாறு மாற்றியுள்ளார். அதே போல் 2 வது பிரதிவாதி பெயரில் மாற்றம் வருவாய் துறை ஆவணங்களை மாற்றி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. ச.எண். 579/3 குறித்து கருப்பாயிக்கு தனிபட்டு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதை அவர் தான பத்திரம் செய்து விட்டதால் அதில் நான் பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல.

13) ச.எண். 579/3 எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தையோ, சாட்சியத்தையோ என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**